சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 11.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | நடராஜன் சேதுபதி |
| தந்தை பெயர் | : | சுதானந்தம் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | இளநிலை மருத்துவர், அறுவைசிகிச்சை பிரிவு |
| வயது | : | 40 |

2026 ம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை:**

கடந்த 16.05.2020 ஆம் தேதி அன்று எங்கள் மருத்துவமனையில் கூத்தாநல்லூர் தாலுக்கா, மழையூர் கிராமத்தை சேர்ந்த ராமச்சந்திரன் மகன் 56 வயதுடைய நடராஜன் என்பவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இவர் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது நான் சிகிச்சை அளித்துள்ளேன். அதன் பின்னர் இவர்மருத்துவமனையிலிருந்து கடந்த 22.05.2020 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அப்போது அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் **எ.ம.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.11 18:12:57 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.